PP17995/02/2013 (033542)

# தமிழ் மலர்

Established 1960

உண்மையின் உரைகல்

TAMIL MALAR DAILY

1.1.2024 திங்கள்கிழமை ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● சோபகிருது ஆண்டு / மார்கழி 16 ● ஹிஜ்ரி 1445 ஜமாதுல் ஆஹிர் - 18 ● மலர் 11 இதழ் 120 RM 1.70

‘ மலர் டிவி ’

QR CODE

‘தமிழ் மலர்’ நாளிதழின் ‘மலர் டிவி’ செய்திகளை உங்கள் போனில் பார்த்துத் தெரிந்துகொள்ள இந்த QR Code-ஐ ஸ்கேன் செய்யவும்!

www.tamilmalar.com.my | tamilmalar2016@gmail.com | Tamil Malar Daily | @Tamilmalardaily | YouTube Malar TV | @MyTamilmalar | 03-4044 9999

பக்கம் 2 ஆதரவை மீட்பது தேசத் துரோகம் அல்ல

பக்கம் 4 புதியதோர் உலகம் செய்வோம்

பக்கம் 7 காசா போர் பல மாதங்கள் தொடரும்

பக்கம் 9 வேலு நாச்சியாருக்கு மோடி புகழாரம்



## 2024 புது புத்தாண்டே வருக... பொலிவை தருக...

புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் என்று வைர வரிகளோடு இருகரம் கூப்பி 2024 புத்தாண்டை வரவேற்கின்றனர் மலாயாப் பல்கலைக்கழக இந்திய மாணவர்கள். இந்தப் புத்தாண்டு புதியதோர் எழுச்சியையும் மறுமலர்ச்சியையும் ஒற்றுமை உணர்வையும் மேலோங்கச் செய்ய வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர்களான சர்வேந்திரன் சந்தர், ரினிஷா விஜயகுமார், சக்தி மூர்த்தி, லாவண்யா ரவிச்சந்திரன், ஹரிணி கருணாகரன், ஹரி கண்ணன், நளன் குணாளன், தீபன் தினகரன், சுவர்ணா விமலேசன், லோகனபிரியா சிவக்குமார், கஜலெட்சுமி சரவணன், சித்ரா இராமன், காசிபன் முனியாண்டி தனேஷ் ஆறுமுகம் ஆகியோர் நம்பிக்கை தெரிவித்தனர். புத்தாண்டை கொண்டாடும் அனைத்து வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் பத்திரிகை விற்பனையாளர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் தமிழ் மலர் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

## பேரரசர் தம்பதியரின் புத்தாண்டு வாழ்த்து



**கோலாலம்பூர், ஜன. 1–**

மாட்சிமை தங்கிய பேரரசர் அல்–சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அமாட் பில்லா ஷாவும் அவரின் துணைவியார் பேரரசி ராஜா பெர்மைசூரி துங்கு அஸிஸா அமினா மைமூனா இஸ்கண்டாரியாவும் மலேசியர்கள் அனைவருக்கும் தங்களின் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

இன்று பிறந்துள்ள 2024 புத்தாண்டில் நாடும் மக்களும் நலமுடனும் வளமுடனும் இருக்க வேண்டும் என்று தாங்கள் பிரார்த்திப்பதாகவும் பேரரசர் தம்பதியர் குறிப்பிட்டுள்ளனர்.

பக்கம் 13



**கோலாலம்பூர், ஜன.1–**

முடிந்த 2023ஆம் ஆண்டை நிறைவு செய்து விட்டோம். பண வீக்கத்தை குறைப்பது இரண்டு விழுக்காடாக குறைந்தது. பொருளாதார வளர்ச்சி அடைந்தது 4 விழுக்காடு நிலை கொண்டது போன்ற இந்த குறுகிய காலத்தில் நாம் சில வெற்றிகளைப் பெற்றிருந்தாலும் நான் இன்னும் திருப்தி அடைய வில்லை. இருப்பினும் உண்மையான நடவடிக்கை என்பது மக்களின் நன்மை, நலன், நல்வாழ்வை கொண்டது என்று தமது புத்தாண்டு வாழ்த்து செய்தியில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறியுள்ளார்.

கடந்த சில வருடங்களாக நிச்சயமற்ற சூழல், வலுவான அரசியல் தளத்தில் இருந்து நாம் ஒரு தொடர்ச்சியான அணியாக செயல்பட வேண்டும் என்பதற்கான சிறந்த வழிகாட்டியாகும். 2024ஆம் ஆண்டில் நாம் இன்னும் கடினமாக உழைக்க வேண்டும். இதுவே எங்களின் உறுதி. அனைவருக்கும் 2024 புத்தாண்டு வாழ்த்துகள் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் குறிப்பிட்டார்.

## பிரதமரின் புத்தாண்டு வாழ்த்து





## வெற்றி நிச்சயமென புத்தாண்டை வரவேற்போம்

**கோலாலம்பூர், ஜன.1–**

வெற்றி நிச்சயம் என்னும் கருப்பொருளோடு 2024 புத்தாண்டை சிறப்பாகக் கொண்டாடுவோம். இன்று மலர்ந்த புத்தாண்டில், நம் துன்பங்கள் விலகி இன்பங்கள் பெருகவும்; அனைவரது வாழ்விலும் அன்பையும், மகிழ்ச்சியையும், நோய் இல்லாத வாழ்வையும், குறைவில்லாத செல்வத்தையும் வழங்கும் ஆண்டாக அமையவும், எல்லாம் வல்ல இறைவனை மனதார பிரார்த்தித்து இனிதே இந்த ஆண்டை வரவேற்போம்.

பக்கம் 13

**கோலாலம்பூர், ஜன.1–**

மலேசிய சமுதாயம் ஒருமைப்பாடுடைய சமுதாயமாக திகழ வேண்டும். மேன்மைக்குரிய சமுதாயமாகவும் விளங்க வேண்டும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அந்தச் சமுதாயத்தின் பங்களிப்பு என்பது இன்றியமையாததாகும்.

பிறந்துள்ள புத்தாண்டு நாட்டு மக்களுக்கு குறிப்பாக இந்தியர்களுக்கு நன்மை தரும் ஆண்டாக இருக்கும் என்று தாம் நம்புவதாக ஓம்ஸ் அறவாரியத் தலைவர் ஓம்ஸ் பா.தியாகராஜன் தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



## ஒருமைப்பாடுடைய சமுதாயமாகத் திகழ்வோம்

பக்கம் 13



**கோலாலம்பூர், ஜன.1–**

பாலஸ்தீனர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனப்படுகொலைக்கு இஸ்ரேலைப் போன்று அமெரிக்காவும் சமமான பொறுப்பை ஏற்க வேண்டும் என்று முன்னாள் பிரதமர் துன் டாக்டர் மகாதீர் முகமது நேற்று குற்றஞ்சாட்டினார். அமெரிக்கா பயன்படுத்திய வீட்டோ அதிகாரத்தினால்தான் இனப்படுகொலை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்றுதமது “எக்ஸ்” இணையப் பக்கத்தில் மகாதீர் கூறினார்.

பக்கம் 13



## காஸா இனப் படுகொலை: அமெரிக்காதான் காரணம் டாக்டர் மகாதீர் சாடல்





## மலேசியர்களிடையே ஒற்றுமை மேலும் வலுவடையட்டும்

**துணைப் பிரதமர்களின் புத்தாண்டுச் செய்தி**

**கோலாலம்பூர், ஜன. 1–**

இப்புத்தாண்டில் அர்த்தம் பொதிந்த மேலும் பல சாதனைகளைப் படைப்பதற்கு மலேசியர்கள் தொடர்ந்து ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அமாட் ஸாஹிட் ஹமிடி நேற்று வலியுறுத்தினார்.

பக்கம் 13

## குடும்ப வறுமையால் 4 பள்ளிக்குச் செல்லாத உடன்பிறப்புகளுக்கு



## கல்வியமைச்சர் உதவிக்கரம்

பக்கம் 13

**( தி.ஆர்.மேத்தியூஸ்)**

**நிபோங் தெபால், ஜன. 1–**

குடும்ப வறுமையின் காரணமாக பள்ளிக்குச் செல்ல முடியாத நிலையில் இருந்து வரும் 4 உடன் பிறப்புகளுக்கு கல்வியமைச்சரும், நிபோங் தெபால் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான பஃட்லினா சிடேக் உடனடி உதவிக்கரம் நீட்டினார்.

உடல் செயலிழந்த நிலையில் இருந்து வரும் சசிகுமார் இராமசாமி போதிய வருமானமின்றி, தனது நான்கு பிள்ளைகளையும் பள்ளிக்கு அனுப்ப முடியாத சூழ்நிலையில் இருந்து வருகிறார்.இந்நிலையில் குடும்பத்தை நேரில் சென்று கண்ட கல்வியமைச்சர், நான்கு பிள்ளைகளையும் உடனடியாக பள்ளியில் சேர்ப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

## 2024 தேர்தல் கூட்டணி யாரோடு? –எடப்பாடி தீவிரம்



**திருச்சி, ஜன.1**

அதிமுக தலைமையில் வலிமையான கூட்டணி அமையும் என்றும் தமிழ்நாடு, புதுச்சேரியில் 40 இடங்களிலும் வெற்றி பெறுவோம் எனவும் எடப்பாடி பழனிசாமி தெரிவித்து உள்ளார்.

பக்கம் 13

## 2024 ராசி பலன் — எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி

மேஷம்